2. நடைமுறைக் கேள்வி

மூல வினாவில் ஒரு பகுதி நீக்கப்படடு அனுமதிக்கப்பட்டது.

DR. H. V. HANDE : On a of point order, Sir. In the original question that was sent by post to me, this supplementary also was included. Actually it has come from the department. But surprisingly in today's list containing questions, this supplementary has not been included. So I had to put the supplementary with your permission and the Hon. Minister was good enough to answer. Otherwise I would have again to put a fresh question for that supplementary and wait for six months to get the answer. In the original question which I had sent, this supplementary was included and subsequently I find it had been deleted, after it has been allowed by the Hon. Speaker.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் கேட்க உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அந்தக் கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டுமென்று அமைச்சர்களைக் கட்டாயப்படுத்த விதியில் இடமில்லை.

DR. H. V. HANDE : I am not denying that. The Hon. Minister can answer or withhold answer. What I say is, according to the reply I got from the department.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த டிபார்ட்மென்ட் ?

DR. H. V. HANDE : Hon. Speaker's department. That supplementary had been allowed. But subsequently it has been omitted when the original question containing this supplementary had been allowed by the Hon. Speaker. I had no idea that it would be deleted later. That is why I raise the point of order and I request you Sir, to give your ruling.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் தங்கள் வினாவில் உட்பிரிவுகள் (எ) (பி) யை மட்டுந்தான் அனுமதித்திருக்கிறார்கள். உட்பிரிவு (சி)-யை அனுமதிக்கவில்லை. உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிற நேரத்தில் அந்தத் தகவல் தெரிவிக்கப்படாமல் இருக்கிறது. அது பற்றி நான் ஆராய்ந்து பார்க்கிறேன்.

1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

தலைஞாயிறுப்பகுதி மானவாரி நிலங்களுக்குப் பாசன வசதி

*409 **வினா.—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலூகா தலைஞாயிறு பகுதியில் வாட்டாகுடி, ஓரணி அம்பலம் ஆகிய கிராமங்களில் 1,000 ஏக்கருக்கு குறையாத அளவு விளை நிலங்களில் பெரும்பாலும் தேங்கியுள்ள தண்ணீரை அதற்கு மேல் உள்ள 250 ஏக்கருக்கு குறையாத அளவுள்ள மானவாரி நிலங்களுக்கு பம்பு வாயிலாக பாய்ச்சிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வடுகூர், ஆய்மூர், தலைஞாயிறு (5-வது சேத்தி), காடாத்திருத்தி முதலிய கிராமங்களில் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவுக்கு வடிகால் வசதி செய்து கொடுக்கவும், மேற்குறிப்பிட்ட வடிகால் நீரை விசையேற்றம் மூலம் இறைத்து தலைஞாயிறு